ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

ஒருபயனை வேண்டாமென்று வெறுத்தவன் அதன் ஸாதனத்தை அனுஷ்டிக்காமல் விட்டுவிடலாம். அந்தப்பயனை வேண்டிக்கொண்டிருப்பவனே அதன்ஸாதனத்தை வேண்டாமென்றுவிட்டுவிடுவது மதியீனமாகும். பெரும்பாலும் பிராணிகளுக்குப் பெருத்த பணக்காரனாயிருக்கவேண்டும், அழகிய மனைவியையடையவேணுமென்றும் ஆசையிருந்துகொண்டே இருக்கின்றதேயன்றி, இவ்வாசை விட்டுப்போகவில்லை, இப்படிப் பெண்ணாசையையும், பொன்னாசையையும், அடைந்திருப்பவன் அவைகட்குச்சாதனமாகிய வர்ணாசிரமதர்மத்தை வெறுப்பது சரியானகாரியமல்ல. தர்மத்தாலன்றி வேறுதிருஷ்டகாரணங்களால் இவை கிடைத்துவிடுமென்று நினைப்பதில்லை, பணத்தாசையால் கிருஷி, வியாபாரம் முதலிய பலகாரியங்களுக்குள் ஒரே காரியத்தில் ஒரேவிதமாகப் பிரவிருத்திக்கின்ற பலபேர்கள் ஒரே மாதிரி பயனையடைவதில்லையென்பது யாவருக்கும் பிரத்தியக்ஷம். அதற்கு திருஷ்டமான காரணங்கள் யாதொன்றும் சொல்லமுடியாது, உதாரணமாக வயல்களில் கிருஷிசெய்கின்ற அக்கம்பக்கத்து வயல்காரர்களான இரண்டுபேர்களும், ஒரேதினுஸு விரைவிட்டு ஒரேவிதமானஎருப்போட்டு, உழவுமுதலிய காரியங்களைச்சமமாகவே செய்து வந்தாலும் ஒருவனுக்கு அதிகநெல் விளைகின்றது. மற்றவனுக்கு அப்படி விளைகிறதில்லை. அங்குஎன்னகாரணம் சொல்லமுடியும். புத்திரரத்தினத்தைப்பெறவேண்டிப் பிரியமான பெண்டிரையடைந்தும், புருஷகாரம் பலசெய்தும் பயன் படாமல்ப்போவதைப் பார்க்கின்றோமன்றோ! தன் வயிற்றிற் பிறந்தபிள்ளையையடையாவிடினும் ஸ்வீகாரம்செய்துகொண்ட புத்திரனையும் சிலர் இழந்துவிடுகிறார்களே. அதில் திருஷ்டகாரணம் என்ன சொல்லமுடியும், நோயற்றவாழ்வாய் இருக்கவேண்டுமென்று ஆசைப்பட்டு, ஆஹாரவிஹாராதிகளை ஒழுங்காகச்செய்துகொண்டுவருபவர்களும் மீளாப்பிணியால் பரிதபிப்பதைப்பார்க்கின்றோம். அங்கும் என்னகாரணம் சொல்லமுடியும், இவ்விடங்களிலெல்லாம் திருஷ்டமான காரணம் யாதொன்றும் சொல்லமுடியாது, ஜன்மாந்தரீயமான பாக்கியந்தான் சாஸ்திரத்தாலதீர்மானிக்கப்பட்டகாரணமென்று யாவருமொப்புக்கொண்டே தீரவேண்டும். ஜன்மாந்தரீயபாக்கியம் நல்லதாயிருக்குமாயின் அதிகப்பிரயத்தினம் செய்யாவிடினும், ஸுலபமாகவே ஸகலஸம்பத்துகளும் கிடைத்துவிடும். அந்தபாக்கியம் கெடுதலாயிருக்குமாயின், திருஷ்டஸாதனங்கள் எவ்வளவு செய்யப்படினும் அவைப்பயனற்றுப்போவதுமல்லாமல் இஷ்டமில்லாத கஷ்டங்கள் பல எதிர்பாராமலே நேர்ந்துவிடுவதும் பிரத்தியக்ஷந்தான். ஆகையால் இஷ்டப்பட்ட பயனைப்பெறுவதற்குப் புராதன புண்ணியமே காரணமாதல்பற்றி அர்த்தகாமங்களையடைவதற்கு வர்ணாசிரமதர்ம்மத்தையே யாவரும் அனுஷ்டித்து ஸகலபாக்கியங்களையுமடைந்து சுகப்படுவாராக. சுபம்

பத்திராதிபர்.

# லோகாந்தரம்.

(254-வது பக்கத்தொடர்ச்சி.)

மாதாபிதாக்களின் ஆத்துமா புத்திரசரீரத்தில் வருவதாகக் கூறுவதில் தோஷமிருப்பதாகக் கூறப்பட்டதே, அப்படி ஒப்புக்கொள்ளுவதில்லை. ஆனால் அவர்களுடைய புத்தியாவது மனதாவது புத்திரசரீரத்தில் வருவதாக ஒப்புக்கொண்டு விடுவோம், அவைதான் அறிவுக்கு ஆசிரயமாயுள்ளவை. அதனால் கீழ்க்காட்டிய தோஷம் நேரிடமாட்டாது என்று சங்கை செய்வதும் சரியன்று.

" बुद्धिर्मनश्च निर्णीते यथैवात्मा तथैव ते "

ஆத்துமா வருகிறதென்ற பக்ஷத்தில் கூறப்பட்டதோஷம் இந்த பக்ஷத்திலும் ஸம்பவிக்குமேயன்றி சம்பவிக்காமற்போகாது. ஏனெனில் ஆத்துமா எத்தன்மைத்துள்ளதாக ஆத்துமவாதிகள் கூறுவார்களோ, மனதையும் புத்தியையும் அறிவுக்கு ஆசிரயமாக அங்கீகரிப்பவர்களும் அந்த புத்திமனதுகளை அத்தன்மைத்துள்ளவைகளாகவே ஒப்புக்கொள்ளவேண்டும். ஆத்துமாவைப்போலவேதான் மனதும் புத்தியும் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே தாய்தந்தைகளுடைய மனதோ புத்தியோ புத்திரசரீரத்தில் வருவதாக ஒப்புக்கொள்ளும்பொழுது அவை முழுவதும் வருவதானால் தாய்தந்தைகளுக்குமனதும்புத்தியுமில்லாமற்போய்விடவேண்டும் சிலபாகம் தாய்தந்தைகளிடம் தங்கியிருந்து சிலபாகம் புத்திரசரீரத்தில் வருவதாக ஒப்புக்கொண்டால் புத்திமனதுகளுக்கு அவயவங்கள் ஒப்புக்கொள்ளவேண்டியதாகும். அதுபிரமாணவிருத்தம். வேதாந்திகள் மனோபுத்திகளை அவயவங்களுள்ளவைகளாகக்கூறுகின்றார்களல்லவா? அப்படி ஒப்புக்கொள்ளலாமேயென்றால் அவர்கள் ஒப்புக்கொள்வதுபோல் அவைகளின் மற்றஸ்வரூபங்களையுமொப்புக்கொள்ளவேண்டும். அப்படியானால் அவை அறிவுக்கு ஆசிரயமானவையல்லவென்று அவர்கள் அங்கீகரிப்பது போல் அங்கீகரித்தல் இந்தப்பக்ஷம் போய்விடும், ஆகவேமனோபுத்திகள்

வருகின்றனவென்ற பக்ஷமும்சரியல்ல. அன்றியும்தாய்தந்தைக ளின்சரீரத்திலிருந்து ஏதோசிலது புத்திரசரீரத்தில் வருவதாக ஒப்புக்கொள்ளுபவர்களுக்கு மற்றோர் தோஷமும் ஸம்பவிக்கும். அதாவது தாய்தந்தையுள்ள பிராணிகள்தான் இருக்கின்றன. மற்ற பிராணிகளில்லையென்று ஒப்புக்கொள்ளவேண்டியதாகும் அதுவும் பிரத்தியக்ஷவிரோதமானது. இதைத்தான் கூறுகின்றார்

"येषां चैषा मतिस्तेषां योनिर्नास्ति चतुर्विधा"

என்றுமுட்டையினின்றும், கர்ப்பப்பையினின்றும் உண்டாகின்ற பிராணிகளைத்தவிர வேறுபிராணி இல்லையென்றுசொல்லமுடியாது. பூமியைப்பிளந்துகொண்டுமுளைக்கும் கொடி, செடி மரம்முதலிய வைகளும், வேர்வையினின்றுண்டாகும், பேன், கொசு, மூட்டைப் பூச்சி முதலியவைகளும் கணக்கிலடங்காப் பிரிவினையுடன்காண ப்படுகின்றனவே. அவைகளில்லையென்று எப்படிச்சொல்ல முடி யும். அவைகளும் தாய் தந்தையுள்ளவைகள்தான் என்றுவது எப் படிச்சொல்லுவது. மனிதர்களின் சரீரோத்பத்திக்குக்காரணமாக தாய்தந்தைகளின் சரீரங்கள் தனித்தனியே காணப்படுவது போல பேனுக்கும் புழுவுக்கும் தாய் தந்தைகள் தனித்தனியாகக் காணப்படுகிறார்களா? ஸூத்திரகாரரும் பிரம்மஸூத்திரம் மூன்று வது அத்தியாயம் முதல்பாதத்தில் இக்கருத்தை விரிவாகக்கூறி யிருக்கின்றார்? ஆகையால் மாதாபிதாக்களைமாத்திரம் ஜன்மகாரண மென்று ஒப்புக்கொள்ளுகின்றவர்களின் வாதம் பொருத்தமுடை யதல்ல, மாதாபிதாக்களும் புத்திரசரீரோத்பத்திக்குக் காரண மென்றால் அதுஉசிதமே. ஆங்குபுத்திரசரீரத்தில் புலப்படும்ஆத்து மாபிராசீனகர்மவசத்தால் லோகாந்தரத்திலிருந்துவந்ததென்றே ஒப்புக்கொள்ளவேண்டும். அது தான் யுக்திக்குமொத்ததாயிருக் கின்றது, அப்படியங்கீகரிக்கும்பொழுது பிராணிகள் பூர்வஜன் மகர்மானுஸாரமாக சரீரத்தை யெடுப்பதாகக்கொள்ளவேண்டும், ஆகையால்பேனும் புழுவாயும் ஜனிப்பதற்குஹேதுவான பாபகர் மத்தைச்செய்துவிட்டு அத்தகைய நீசப்பிறவியையடைந்து மனி தர்களுக்குத்துன்பத்தைச்செய்து அவர்களால் நசுக்கப்பட்டு உயிரையிழந்து உடனேகொசுவாய்பிறந்து அடிபட்டு இவ்வாறு செத்துச்செத்துக் கஷ்டத்தையடையாமல் நல்லபுண்ணியகார்யங் களையே செய்து சிறந்தபிறவியையடைந்து உயர்ந்தஸாதனங்களை யனுஷ்டித்து சுகமாகவேயாவரும் வாழ்வார்களாக. பத்திராதிபர்

அடையப்பலம் கிராமத்தில்

# ஆசார்ய விஜயம்.

(271-வது பக்கத்தொடர்ச்சி)

அதில் "அக்கோவிலில் ஸ்ரீகண்டமூர்த்தி என்ற லிங்கத்தைப் பிரதிஷ்டைசெய்து அக்கோவிலும் தீக்ஷிதாவர்களால் கட்டுவிக்கப்பட்டதென்றும் ஸ்ரீகண்ட பாஷ்யத்தையும் சிவார்க்கமணிதீபிகையையும் கற்க 500 வேதியர்களுக்கு சின்ன பொம்மராஜாவால் ஸ்வர்ணவர்ஷம் அளிக்கப்பட்டதென்றும் எழுதியிருக்கிறது. தீக்ஷிதாவர்களின் ஸமகாலத்தியவர்களுடையவோ அல்லது அவர்களுக்கு முந்தியவர்களுடையவோ நான்கு தீக்ஷிதர்களின் நாமதேயம் சேர்த்து வெட்டப்பட்டிருக்கிறது." பிறகு ஸ்ரீமடத்திற்கு விஜயம்செய்து நம் ஆசார்யமூர்த்தி சந்திரமௌளீசுவரரின் ராத்திரி ஆராதனத்தை முடித்துக்கொண்டு சிவோத்கர்ஷத்தைப்பற்றி திவ்யவாகமிருதப்பிரவாகத்தை சிஷ்யானுக்கிரகார்த்தம் வெளியிட்டனர்.

यद्यप्यद्वैतएव श्रुतिशिखरगिरामागमानां च निष्ठा ॥

என்ற சுலோகப்படி தீக்ஷிதாவர்களுக்கு அத்வைதத்திலேயே பரம நிஷ்டை இருந்தபோதிலும் தான் சிவோத்கர்ஷத்தை நிலைநிறுத்த அவதரித்த மூர்த்தியானதால் வந்தகார்யத்தைச் செய்யவேண்டுமென்று அத்வைதத்திற்கு மிக நெருங்கியிருக்கும் சிவோத்கர்ஷத்தையே வெளியிட்டனரென்றும் அவாதுகிரந்த மகிமையையும் அவரது மகிமையையும் பற்றி சுமார் 2மணிநேரம் கேட்பவர் பிரமித்துப் பரவசமடையும்படி அவ்வுபன்யாஸம் செய்தது. முடிவில் கருணாமூர்த்தி கிராமமஹாஜனங்களுக்கு இவ்விதம் உத்தரவிட்டனர்:- ஸ்ரீதீக்ஷிதர் அவர்களின் அவதாரதினத்தைப் பிரதி வருடமும் கொண்டாடவேண்டுமென்றும் அதற்காக அவ்வம்சத்தவர்கள் 1ரூபாய் வீதம் போட்டால் அளவுக்குமிஞ்சியரூபாகிடைக்குமென்றும் அவ்விதம் செய்தால்தான் கிருதக்ஞர்களாவீர்களென்றும் உங்களது முயற்சியின்மைதான் குறைவுக்குக் காரணமென்றும் பக்கத்தில் தங்கள் பெரியாரின்பக்தியைக் காட்டுவதற்காக காலிமனைகளை வாங்கிப்போட்டு கட்டாமலிருப்பதுகூட அவர்கள் குற்றமல்ல. அவர்களை அடிக்கடி தூண்டாதகுற்றம் உங்களையேசாருமென்றும் அவர்கள் மதுரையில் அவர்களது முன்னோர்களின்

அனுக்கிரஹத்தால் ஸகல பாக்கியங்களுடனிருப்பதாயும் கூறினர். பிறகு அடியேன் மதுரை என்று சொன்னதைக்கொண்டு இன்னை ரென்று தெரிந்துகொண்டாலும் ஸ்ரீசரணங்களின் திவ்யவாக்கால் கேட்டுத் தெளிவோமென்று வணங்கி வினவியதும் ஒரு பக்கத்திலுள்ள மனை சாம்பமூர்த்தி அய்யாவர்களுடையதென்றும், மற்றொன்று அப்பாசாமி அய்யாவர்களுடையதென்றும் காட்டியதால் தெரிந்துகொண்டேன். இவர்களிடத்தில் நீயும் நேரிற் சொல்லி இந்தக் கைங்கர்யத்தில் நன்கு ஈடுபடும்படி செய் என்றும் உத்தரவிட்டார்கள். பிறகு மஹாஜனங்கள் அவ்விதமே தீக்ஷிதாவர்கள் ஜயந்தியை நடத்துகிறோமென்றும் அவ்வம்சத்தவர்களான மதுரை அய்யாவர்களிடம் தெரியப்படுத்தி கட்டடத்தையும் புத்தகசாலையையும் ஏற்படுத்தக் கேட்டுக்கொள்கிறோமென்றும் கூறி அனுக்ரஹாக்ஷதை பெற்றுக்கொண்டனர்.

இங்கு தீக்ஷிதாவர்களிடத்தில் நம் கருணாமூர்த்திக்கு ஏற்பட்ட உயர்ந்த ப்ரீதிக்குக்காரணம் இது. யாவரும் மற்றவர்களைக் காட்டிலும் தன் இனத்தவர்களிடத்தில் விசேஷ சலுகை பாராட்டுவது வழக்கம். அதை ஒட்டிப்பார்த்தால் தீக்ஷிதாவர்களும் நம் பகவத்பாதாளும் அவதாரபுருஷர்கள். இருவரையும் சேர்த்தே சிவாகஸ்யம் 9-வது அம்சம் 8-வது அத்தியாயத்தில் கலிவிசேஷத்தைப்பிரஸ்தாபிக்குமிடத்தில்

म्लेच्छाचारपरास्सर्वे दरिद्राश्च द्विजातयः ।
भविष्यत्यल्पमतयो यतिस्तत्र भविष्यति ॥
शिवे मदंशसंभूतः शङ्करश्शाङ्करोत्तमः ।
चतुर्भिस्सह शिष्यैश्च कलाववतरिष्यति ॥
तस्मै चोपनिषद्विद्या मया दत्ता महेश्वरि ।
भूमौ पाषण्डषण्डानां खण्डनं स करिष्यति ॥
कलावेव महादेवि हरदत्ताभिधो द्विजः ।
अशैवदण्डनार्थाय भविष्यति महीतले ।
दीक्षितोऽपि भवेत्कश्चित् मदंशो भूसुरोऽम्बिके ॥
भासुराचारनिरतश्शैवश्छन्दोगवंशजः ।
शैवशास्त्रं तदा भूमौ लुप्तं विस्तारयिष्यति ॥

கலியில் பிராமணர்கள் மிலேச்ச ஆசாரமடைந்தவர்களாயும் தரித்திரர்களாயும் புத்தியற்றவர்களாயும் உண்டாவார்கள். அக்காலத்

தில் ஹே பார்வதி! பக்தியில் மிகுந்த சங்கரன் என்று பெயர் கொண்டு என் அம்சத்தில் உத்பவித்து ஸந்நியாஸியாய் நான்கு சிடர்களோடு ஒருவர் வருவார். அவருக்கு மகேச்வரி நான் உபநிஷத்வித்யையைக் கொடுப்பேன். அவர் பூமியில் பாஷண்டக் கூட்டங்களைக் கண்டிப்பார். மகாதேவி இக்கலியில் சைவமதத்தை தூஷிப்பவர்களைக் கண்டிப்பதற்காக ஹரதத்தர் என்று ஓர் பிராமணன் உண்டாவார். அம்பிகே என் அம்சத்திலிருந்து தீக்ஷிதர் ஒருவர் தோன்றுவார். அவர் கசடற்ற ஆசாரங்களில் ஆழ்ந்தவராய் இருப்பார். சாமசாகிகளின் வம்சத்திற் பிறப்பார். அவர் அப்போது பூமியில் மறைந்துபோன சைவசாஸ்திரங்களை மறுபடி விஸ்தாரப்படுத்துவார்-என்றிருக்கிறபடி இருவர்களும் சேர்ந்தவர்களானதால் அந்த நம் பகவத்பாதர்களது பீடத்தில் வீற்று அவதார ஆவேசமும் பெற்ற நம் தற்கால ஆசார்யசிரேஷ்டர்கள் தீக்ஷிதாவர்களிடத்திலும் அவர்களது அவதாரஸ்தலத்திலும் ப்ரீதி காட்டுவது ஸஹஜமென்றே கொள்ளவேண்டும். இம்மகான் இனி அவதரித்த காலத்தை காட்டக்கூடிய சுலோகம் ஒன்றைமட்டிலும் எழுதி நிறுத்துகிறேன்.

वीणातत्वज्ञसंख्यालसितकलि समाभाक्प्रमाद्याख्यवर्षे
कन्यामासे तु कृष्णप्रथमतिथियुतेऽप्युत्तरप्रोष्ठपाद्भे ।
कन्यालग्नेऽद्रिकन्यापतिरमितदयाशेवधिर्वैदिकेषु
श्रीगौर्यैं प्राग्यथाह स्म समजनि विरिञ्चीशपुर्यां कलेशः ॥

ஜ்யோதிஷசாஸ்திரப்படி 4654 கலியில் பிரமாதீவ வருஷத்தில் புரட்டாசிமாதம் கிருஷ்ணபக்ஷம் பிரதமை உத்திரட்டாதிநக்ஷத்திரம் கன்யாலக்னத்தில் ஸ்ரீகலேசர் தீக்ஷிதராய் விரிஞ்சிபுரத்தில் அவதரித்தார் என்று ஆகிறது. மாமன்வீடு அங்கானதால் அங்கும் இருக்கலாமென்று எண்ணலாம். ஆனால் இவர்களுடைய பிதா பிதாமகர்களுடைய வாஸம் இந்த கிராமத்தில்தான். ஸ்ரீபகவத்பாதாள் வெகுகாலத்திற்குமுன் அவதரித்தபோதிலும் அவர்களுடைய வீட்டின் அடையாளம் நாளதுபரியந்தம் இருந்ததுபோல் ஸ்ரீ தீக்ஷிதாவர்களின் கிருகமென்று அடையாளம் ஏதாவதிருக்கிறதாவென்று அடியேன் கிராமத்தவர்களை விசாரித்ததில் அவ்விதம் இல்லையென்றும் ஆனால் புராதன அக்கிரஹாரம் தீக்ஷிதாவர்கள் காலத்திலும் அதற்குப்பின் வெகுகாலபரியந்தமும் கோவி

லுக்குப்பக்கத்தில்தான் இருந்ததென்றும் ஓர் காலிகிலத்தைக் காண்பித்தனர். ஆகவே அம்மகானின் அடையாளத்திற்குக் கல்வெட்டும் ஜனவாதமும்தான் காண்கிறது. ஆனல் இவ்வுத்தம கிராமத்தில் இப்போது ஸர்வமனிதர்களேயும் பிடித்து ஆட்டி ஒட்டையாண்டியாயும் மகாபாபிகளாயும் வைதிகதர்மத்திற்கும் ஆயுர்வேதத்திற்கும் பரமவிரோதமாயும் ஆயுளையும் பலத்தையும் குறைத்து வாட்டுகிறதாயுமான பெருங்குடி காப்பிக்குடி என்பது கிடையாதாம். இதை இக்கிராமத்தவர்கள்மூலம் கேட்டு மிகவும் திடுக்கிட்டேன். ஆச்சர்யமடைந்தேன். அக்கிராமத்தில் எவ்வருணத்தவரும் காபி குடிப்பதே கிடையாதாம். இது இக்காலத் ஓர் பரமஆச்சர்யமல்லவா. அதனல் அவர்கள் தேஜஸ்விகளாகவும் திடசரீரிகளாகவும் விளங்குவதுபோல் அப்பரம்பரையும் அவ்விதமே வரவேண்டுமென்று கருணாநிதியைப் பிரார்த்திக்கிறேன்.

M. N. சுப்பிரமணிய சாஸ்திரி.

---

# வயோநிர்ணயம்.

(முன்தொடர்ச்சி)

ஸ்மிருதிவசனங்களில் போல் வேதவசனங்களிலும், திருஷ்டகாரணங்களைக் கற்பனைசெய்து விடமுடியாதா? கற்பனைஎன்பது எங்குஞ் செல்லுமன்றோ? அப்படியானல், நாஸ்திகமதமல்லவா ஸித்தித்துவிடும். பிரத்தியக்ஷம் ஒன்றுதான் பிரமாணமென்று அங்கீகரிக்கும் நாஸ்திகர்களுக்கு, வைதிககர்மாக்களில் சிறிதும்நம்பிக்கையில்லை. அவர்கள் அக்னிஹோத்திரம் முதலிய வைதீககாரியங்களெல்லாம் ஜீவனேபாயமென்றல்லவா கூறுகிறார்கள். வைதிககாரியங்களெல்லாவற்றிற்குமே ஸ்வர்க்கம் முதலிய பரலோகம், பலனாக சார்வாகமதத்தில் ஸித்திக்கமுடியாது. ஜீவஹிம்ஸை செய்யக்கூடாதென்று நிஷேதித்திருப்பதால் ஜீவஹிம்ஸையை உள்ளடக்கிக்கொண்டிருக்கும அக்னிஷ்டோமம் முதலியவைதிககர்மயக்ஞம் அனுஷ்டிக்கக்கூடியவைகளல்ல. ஆகவே அக்னிஷ்டோமயாகத்தை விதிக்கும்சுருதிவசனத்துக்கு ஒரு ஜீவர்களையும் ஹிம்ஸிக்கலாகாது, என்றநிஷேதத்துடன் விரோதத்தை நாஸ்திகர்கள் கூறுகிறார்கள்.

ஆகையாலிவ்விதம் வேதம் பரலோகம், தர்மம், தெய்வம், முதலியவற்றை ஒப்புக்கொள்ளாமலிருக்கும்நாஸ்திகர்களுக்கு, வைதிகதர்மமார்கத்தில்ப்பிரவேசத்தை அங்கீகரித்துவிடுயபட்சத்தில் அத்தகைய நாஸ்திகர்களால், வைதிகதர்மமார்க்கத்திற்க்கே அடியோடு நாசமேற்பட்டுவிடும். நாஸ்திகர்களுக்கு தர்மமார்க்கத்தில் அவகாசங் கொடுத்துவிடும் பக்ஷத்தில் தர்மமார்க்கத்தைக் கைப்பற்றிக் கொண்டு விடவேமாட்டார்கள். குரங்குகளுக்கும் பிசாசங்களுக்கும் எதுவரையிலொரு விஷயத்திலவகாசமில்லையோ அதுவரையில் தான் அவ்விஷயத்திறகுக்குறைவொன்றும் எறபடாது. அவ்விரண்டிற்கும் அவகாசமளித்துவிடும் பக்ஷத்தில் அவ்விஷயத்திற்கு அடியோடு விநாசந்தானேறபடும. அதுபோலவே வைதிகதர்மமார்க்கத்திலும், கொஞ்சமிடங் கொடுத்துவிடும் பக்ஷத்தில் தமது யுக்திவாதமூலாக வைதிகமார்க்கமெல்லாவற்றிலும் கொஞ்சங்கொஞ்சமாக நுழைந்துகொண்டு வைதிகதர்மமார்க்கத்தை நசிக்கும்படி நாஸ்திகர்கள் செய்துவருவார்கள். நாஸ்திகமார்க்கத்தைப்பரவும்படியும செய்துவிடுவார்களானதால், நாஸ்திகசாஸ்திரமார்க்கமென்ற வலையில் சிக்குண்டுகிடக்குமெவன்தான் உயிருடன் தப்பிப்பிழைப்பான்? ஆகையால் லோகாயதமென்னும் நாஸ்திகசாஸ்திரத்தை மட்டிலும் பிரமாணமாக அவலம்பித்துக் கொண்டும் வைதிகதர்மங்களை யெல்லாமடியோடு அழித்துவிடுவதில் ஊக்கங்கொண்டுமிருக்கும் சார்வாகங்களின் மனோரதத்தை நிறைவேற்றிவைப்பது மீமாம்ஸாநிபுணர்களுக்கு கொஞ்சங்கூட அழகல்ல. ஆதலால் சுருதி ஸ்மிருதி வேதாங்கஙகள் வைத்தியம் இவைகளில் ஹேதுவாதம்செய்யலாகாதென்ற" ஸ்மிருதியால், ஸ்மிருதிகளிடத்தில் ஹேதுவாதஞ்செய்யக்கூடாதென்று புலப்படுவதால் ஸ்மிருதிகளின்பிராமாணிக விஷயத்தில் ஸம்சயமடைவது ஸரியல்ல. ஆகவேஸ்மிருதிவசனங்களெல்லாம் பிரமாணமேயாகும்." என்று — தந்திர வார்த்திகத்திலிவ்வாறுவிரிவாயுறைத்திருப்பதால் ஸ்மிருதிகளுக்கு திருஷ்டகாரணங்களை மூலகாரணமாகக் கற்பனை செய்வது வைதிகர்களுக்கு உசிதமில்லை.

(9) அன்றியும் விவாஹ மந்திரலிங்கங்களை அவலம்பித்துக் கொண்டு ருதுமதீ விவாஹத்தை சாஸ்திரீயமென்று நிரூபணம் செய்வது ஸரியல்ல. ஏனென்றால் இவ்விவாஹமந்திரலிங்கங்கள் மீமாம்ஸக ஸம்பிரதாயம் தெரியாத மூடர்களால் கண்டுபிடி

பட்டவையேயொழிய பண்டிதர்களாலல்ல. லிங்கத்திற்கு விருத்த மாயிருக்கும் ஸ்மார்த்த விவாஹ விதிவாக்கியங்களோவென்றால் மூடர்களால் கண்டு பிடிக்கப்பட்டவையல்ல. ஆனால் தோஷலேச மற்றவர்களும், பிராமாணிகசிரேஷ்டர்களுமாகிய மனுமுதலிய மகரிஷிகளுக்குப் பிரத்தியக்ஷமாயுள்ளவை. ஆகவே, ஸ்மிருதி யிலுள்ள விதிகளுக்கு விரோதியாயிருக்கும் மந்திரலிங்கங்களால் ருதுமதி விவாஹம்சாஸ்திரியமாக எப்படி ஸித்திக்கக்கூடும், மக ரிஷிகளுடையப் பிரத்தியக்ஷானுபவத்தால்ஏற்பட்டுள்ளஸ்மார்த்த விதிகள் பலவுளதால் பாலிகாவிவாஹமேசாஸ்திரீயமாகும். அப் படியே, அங்கிரஸ், வஸிஷ்டர், சாதாதபர், ஆச்வலாயனர், யமர், ஸம்வர்தர், போதாயனர் பிருஹஸ்பதி, யாக்ஞவல்க்யர், நாரதர், பாராசரர், முதலிய மகரிஷிகளெல்லோரும் வேதப் பிரமாணத்தால் ருதுமதிவிவாஹம் செய்யக்கூடாதென்று நிஷேதித்திருப்பதாகவே நன்கு நிர்ணயித்துக்கொண்டு அவ்வேதப்பிரமாணத்தால் வெளி யாகும் ருதுமதீவிவாகலிலக்குகளின் அர்த்தத்தையே தமது ஸ்மி ருதிக்கிரந்தங்களில் வெளியிட்டிருக்கிறார்கள். அங்கிரஸ் கூறுவதா வது "எவளொருவள் ரஜஸ்வலையாகவே தந்தையின் வீட்டில் வசித் துவருவாளே, அவளுடைய தந்தைக்குப்ரூணஹத்தி என்னும் பாபம் ஸம்பவித்துவிடும். அந்தப் பெண்ணும் சூத்திரஸ்திரீயாக ஆவாள், தாய், தந்தை, தமையன் இம்மூவர்களும், தமது பெண்ணை ரஜஸ்வலையாகவிருக்கும்படி பார்த்துக்கொண்டு உதாஸீனமாயிருப் பார்களேயானால், நரகத்தையடைவார்கள். அத்தகையருதுமதியை காமவெறிகொண்ட எவனொருவன் விவாஹஞ்செய்து கொள்கின் றானோ? அவனுடன், விவாஹம் போஜனம் முதலிய வியவஹாரஞ் செய்யக்கூடாது. ஸமபந்தியிலுட்கார்ந்துகொண்டு அவனுடன் போஜனமும் செய்யலாகாது. அன்றியும் அப்பிராமணன் சூத்திர ஸ்திரீயை விவாஹம் செய்துகொண்டவனாகவுமாவான்" என்று கூறியுள்ளார்.

வசிஷ்டமுனிவரோ "எவனொருவன் ஜாக்கிரதைக்குறைவால் தமது பெண்ணை சாஸ்திர விகிதமாயுள்ள வயோவதிவகாலத்தை அதிக்கிரமித்துஒருவனுக்குவிவாகம்செய்துகொடுப்பானோ? அவள் தானங்கொடுத்த தந்தை முதலியவர்களைஸமாவர்த்தனகாலத்தில் கொடுக்கப்படாமலிருக்கும் குருதக்ஷிணைபோல்கொன்றுவிடுவாள். ஆகையால் ருதுவாகி விடுவாளோ என்று பயந்து ருதுவக்குமுன்

பே கன்யகையாகவிருக்கும் போதே பெண்ணை தானம் செய்து விட வேண்டும். இன்றேல் ருதுவாகி வீட்டில் தமது பெண் வசிப் பாளேயானால் தந்தைக்குத் தோஷமுண்டு. அதுஎத்தகையதோஷ மென்றால் பெண் தந்தையின் வீட்டில் எவ்வளவு ருதுக்களையடை வாளோ அவ்வளவு சிசுஹத்தி செய்தபாபம் பெற்றோர்களுக்கு ஸம்பவிக்கும். இது தர்மசாஸ்திர சித்தாந்தமென்று கூறினர். அப்படியே லகுசாதாதபமகரிஷியும் — "விவாஹஞ்செய்விக்கப் படாமல், எவனுடைய பெண்தன்வீட்டிலேயே ஆர்த்தவத்தை அடைவாளோ? அவன் சூத்திரஸ்திரீயாகவும், அவளுடையதந்தை ப்ருணஹத்திஎன்னும்பாபத்தைச்செய்தவனாகவும், ஆய்விடுவான்" என்றுகூறுகின்றார். ஆச்வலாயனர் விவாஹம்செய்விக்கப்படாமல் எந்தப்பெண் ரஜஸ்வலையாக ஆவாளோ? அவளும், அவளுடைய கணவனும், அவளுடையபுதல்வனும், சூத்திரர்களாகவே ஆவார்கள் என்றுசொன்னர்.

யமர்—"எவன் ஒருவன் ஒருநாளிரவாவது, சூத்திரஸ்திரீயி டம், புணர்ச்சியடையும் பக்ஷத்தில், அவன், அதனாலுண்டாகும் பாபத்தை மூன்றுவருஷபரியந்தம், பிச்சையெடுத்துக்கொண்டும், காயத்திரீமுதலிய மஹாமந்திரங்களை ஜபம் செய்துகொண்டும் தான் போக்கடித்துக் கொள்ளவேண்டும். மதங்கொண்ட எந்தப்பிராம் மணன் சூத்திரஸ்திரீயை (ருதுமதியை) விவாகஞ் செய்துகொள் வானே அத்தகையபிராம்மணன்எப்போதும் ஸூதகமுள்ளவனாக வும், தினந்தோறும் புருணஹத்தி என்னும் கொடியபாபத்தைச் செய்தவனாகவும் ஏற்படுவான். சூத்திரஸ்திரீயுடன்(ருதுமதியுடன்) ஒருவன் ஒருமாதகாலம்சேர்ந்து ஸுகத்தையனுபவிக்கும்பக்ஷத் தில், அவன் இப்பிறவியில் சூத்திரனாகவும் மறுபிறப்பில் நாயாக வும் ஆவான். சூத்திரஸ்திரீயின் அதராஸத்தைப் பானஞ் செய்த வனுக்கும் சூத்திரஸ்திரீயின் மூச்சுக்காற்றடிக்கப்பட்டவனுக்கும், சூத்திரஸ்திரீயிடம்புதல்வனை உத்பத்திபண்ணினவனுக்கும்,பிராயச் சித்தமோரிடத்திலும் விதிக்கவில்லை. எவள்விவாஹஞ்செய்விக்கப் படாமல்தந்தையின்வீட்டிலேயேருதுவாகியும்தங்கியிருப்பாளோ? அவளுடையதகப்பனுக்குப்ருணஹத்திசெய்தபாபம்ஸம்பவிக்கும். அவளுஞ்சூத்திரஸ்திரீயாக ஆவாள்.

அத்தகைய பெண்ணை காமவெறி கொண்ட எந்தப் பிராம் மணன் விவாஹம் செய்துகொள்கின்றானே அவன் சூத்திர ஸ்திரீ

யை விவாஹம் செய்துகொண்டவனாகவும் வியவஹாரம் முதலிய காரியங்களுக்குத் தகுதியற்றவனாகவும் ஒரே பந்தியிலுட்கார்ந்து கொண்டு போஜனம்பண்ணுவதற்கு யோக்யதை இல்லாதவனாகவும் ஆவான். எவனொருவன் பத்தாவது வயதில் தன் பெண்ணிற்கு விவாஹஞ்செய்விக்கவில்லையோ ஒவ்வொரு மாதத்திலும் உண்டாகும் அவளுடைய சோணித(ஸ்திரீவீர்ய) த்தைத்தகப்பன் குடிக்கின்றான். ஏனென்றால் பெண்கள் எட்டாவது வயதில் கௌரியாகவும் ஒன்பதாவது வயதில் ரோஹிணியாகவும் பத்தாவதுவயதில் கன்யகையாகவும் பத்தாவதுவயதிற்குமேல் ருதுமதியாகவும் இருக்கின்றார்களோ!

தாய் தகப்பன் தமையன் இம்மூவர்களும் ருதுவுக்குமுன்பு விவாஹஞ் செய்விக்காமல் ருதுவாகும்படி பார்த்துக்கொண்டிருப்பார்களேயானால் நரகத்தையடைவார்கள்" என்று உத்கோஷித்திருக்கின்றார்.

அவ்வாறே ஸம்வர்த்தருங்கூட— "ஸ்திரீகள் எட்டாவது வயதில் கௌரியாகவும் ஒன்பதாவது வயதில் ரோஹிணியாகவும் பத்தாவது வயதில் கன்யகையாகவும் ஆவார்கள். அதற்குமேல் ரஜஸ்வலையாகவே கருதப்படுவார்கள்." தன் பெண்ணுக்கு ருதுவுக்கு முந்தியே விவாஹஞ்செய்விக்காத தாய் தகப்பன் தமையன் முதலிய மூவர்களும் நரகத்தையடைவார்கள். ஆகையால் ருதுவுக்கு முந்தியே ஸ்திரீகளுக்கு விவாஹஞ்செய்விக்கவேண்டும். ஸ்திரீகளுக்கு எட்டாவது வயதில் விவாஹஞ்செய்வதுதான் மேன்மை பொருந்தினதாகும்" என்று ஸ்பஷ்டமாக விவாஹவயதைக் குறிப்பிட்டுள்ளார். இந்தப்ரகாரமாக போதாயனமஹரிஷியும் "நற்குணமுள்ள பிரும்மசாரிக்கு ருதுவுக்குமுந்தியே தமது பெண்ணை விவாஹஞ் செய்துகொடுக்கவேண்டும். ருதுவாவதற்குள் நற்குணம் பொருந்திய வரன் கிடைக்காமல்போனால் குணமற்ற எவனுக்காவது ருதுவுக்குமுந்தியே பெண்ணைக்கொடுத்துவிடவேண்டும். நற்குணசீலனாஞ் வரன் கிடைக்கவில்லை என்று பெண்ணை ருதுவாகும்படி வைத்துக்கொள்ளலாகாது" என்று வெகு ஸ்பஷ்டமாகக் கன்யகாவிவாஹத்தை விதித்துள்ளார்.

இவ்விதமாகவே பிருஹஸ்பதிபகவானும் "ருதுவுக்குமுன்பு விவாஹஞ் செய்விக்காத பெற்றோர்களுக்கு சிசுஹத்திதோஷம்

ஸம்பவிக்குமென்றும் அத்தகைய பெண்ணுங்கூட சூத்திரஸ்திரீக்குச் சமானமாவாளென்றும் அப்படிப்பட்ட பெண்ணை விவாஹம் செய்துகொண்ட புருஷனுடன் போஜனாதிவியவஹாரம் செய்யக் கூடாதென்றும் பகன்றார்.

ஸ்ரீ யாக்ஞவல்க்யமஹரிஷியுங்கூட "விஹிதகாலத்தில் கன்யகாதானஞ் செய்துகொடாமலிருப்பவன் அக்கன்யகையின் ஒவ்வொரு ருதுவிலும் ஒவ்வொரு சிசுஹத்திசெய்தவனாவான்" என்று சொல்லியிருக்கின்றார்.

நாரதருமப்படியே "கணவனில்லாமல் பெண்கள் எவ்வளவு ருதுவையடைவார்களோ அவ்வளவு சிசுஹத்திதோஷம் தானஞ் செய்துகொடாமலிருக்கும் தகப்பன்முதலியவர்களுக்கு ஸம்பவிக்கும்" என்று சொன்னார்.

கன்யகையைத்தான் விவாஹஞ் செய்து கொடுக்கவேண்டும் என்பதற்கு இவ்வளவு ஸ்மிருதி வசனங்களாதாரமாக இருப்பது போல பிரத்தியக்ஷ வேதவசனங்களும் பலவுண்டென்றுஸித்தாந்தமுறைக்குமிடத்தில் உதாகரித்துக்காட்டுவாம். இவ்வாறு வேதத்தில் வெகு ஸூக்ஷ்மமாகப் பிரகாசிக்கும், பாலிகாவிவாகத்தையும் வேதார்த்தையும் விரிவாயும் தெளிவாயும் விவரணஞ் செய்வதற்காகக் கங்கணங்கட்டிக்கொண்டிருக்கும் பிராமாணிகர்களாகிய மகரிஷிகளனைவரும் தத்தம் ஸ்மிருதிகளில் ஸ்பஷ்டமாக விதித்திருக்கும் காலத்தில் இந்த ஸ்மிருதி வசனங்கள் எல்லாவற்றிற்கும் முற்றிலும் முரண்பட்டிருக்கும் ருதுமதீ விவாஹத்தை சாஸ்திர ஸித்தமென்று கல்பனை செய்வதற்குச் சிறிதும் அவகாசமில்லை என்பது திண்ணம். மகரிஷிகளைத் தவிர நம் போன்றவர்களுக்கு வேதங்களின் தத்வார்த்தத்தை உண்மையாக அறிந்து கொள்வதற்குங்கூட ஸாமர்த்தியமில்லை. ஆகையால் தான் வேதமே, நம்போன்றவர்கள் வேதார்த்தத்தை கூறுவார்களேயானால் அவர்களினின்றும் பயப்படுவதாக மனுஸ்மிருதியில் சொல்லப்பட்டிருக்கின்றது.

அதாவது "நம்மை இவன் அடியோடு கெடுத்துவிடுவான் என்று வேதம் அல்பஞானமுள்ளவனைக்கண்டு பயப்பட்டுகின்றது" என்று சொல்லியிருக்கின்றாரல்லவா?

அன்றியும் மகரிஷிகளின் ஸ்மிருதிவசனங்களை அநுசரித்துக் கொண்டிருக்கும் வேதார்த்தந்தான் உண்மை வேதார்த்தமாகும். அப்படிப்பட்ட வேதார்த்தத்தைத்தான் நிச்சயப்பிரமாணமாகவும் அங்கீகரிக்கவேண்டுமென்றும் மகரிஷிகளே ஸ்மரித்திருக்கின்றார்கள். அதாவது— யுக்தி முதலிய பிரமாணங்களால் குருவை அபேக்ஷிக்காமல் தானாகவே அறிந்துகொள்ளப்பட்ட வேதார்த்தத்தில் ஸம்சயமோ விபரீதக்ஞானமோ அறியாமையோ இவை முதலிய தோஷமேற்பட்டாலுமேற்படலாம். மகான்களான மகரிஷிகளால் நிர்ணயமாக அறிவிக்கப்பட்டிருக்கும் வேதார்த்தத்தில் எவ்விததோஷமும் ஸம்பவிப்பதற்குநியாயமில்லைஎன்று. ஆகையால் இதுகாறும் உதாகரிக்கப்பட்ட தர்மசாஸ்திர வசனங்களால் ருதுமதீ விவாஹத்திற்கு ஸாதகயுக்தியாக தங்களால் எடுத்துரைக்கப்பட்ட மந்திரலிங்கங்களுக்குகு "மனிதர்களின் எலும்பை ஸ்பரிசித்துவிட்டால் ஸ்னானம்பண்ண வேண்டுமெ"ன்ற சாஸ்திரப் பிரமாணத்தால் "மனிதனின் மண்டையோடு வெகு சுத்தமானது" என்ற அநுமானத்துக்குப்போல் பாதமேற்பட்டுவிட்டதாகவே தான் அங்கீகரிக்கவேண்டும்.

10. தவிற, தங்களால் உதாகரிக்கப்பட்ட விவாகமந்திரங்களை மகரிஷிகள் அறிந்திருக்கின்றார்களா? இல்லையா? அவர்கள் அறிந்திருக்கும்பக்ஷத்தில் அவ்வித மந்திரங்களினின்றும் வெளிவரும் லிங்கங்களால் ருதுமதீ விவாஹத்தை சாஸ்திரீயமென என் அவர்கள் கொஞ்சமுமொப்புக்கொள்ளவில்லையோ? தங்களைக் காட்டிலும் அவர்கள் புத்தியில் தாழ்ந்தவர்கள் இல்லையே. மகரிஷிகளுக்குள் விவாஹவிஷயத்தில் அபிப்பிராயபேதங்கொண்டிருப்பதால் எடுத்துதாஹரிக்கவில்லையென்றாலோ அபிப்பிராயபேதமடைந்த மகரிஷிகளுக்குள் ஒருவராவது இம்மந்திர லிங்கங்களை எடுத்துதாகரிக்கக்கூடாதா? விவாகமந்திரங்களெல்லாம் விவாக கர்மாவில் விநியோகஞ் செய்திருக்கும் முன்னோர்களுக்கு அம்மந்திரங்களின் அர்த்தவிசேஷம் தெரியாது, எனக்கு மாத்திரம் தெரியும் என்று நினைப்பது தங்களுடைய கனவேயாகுமேயன்றி வாஸ்தவமாகா. மந்திரலிங்கங்களால் ருதுமதீவிவாஹம் சாஸ்திரீயமென்று ஸ்தாபிப்பதற்குத் தங்களுடைய புத்தியொன்றுதான் பிரமாணமேயொழிய வேறு யாதொரு பிரமாணமுங்கிடையாது. நம்முன்னோர்களாகிய மகரிஷிகளுக்கு விவாஹமந்திரங்களும் அத

னர்த்தவிசேஷமும் தெரியாதென்னும் விஷயத்தை அம்மகரிஷி ளின் ஸ்மிருதி வசனங்களில் சிலவற்றை ஆபாஸமாக அறிந்து கொண்ட பிறகு தான் தீர்மானிக்கவேண்டியிருப்பதால் அவர்க ளுக்கும்மந்திரார்த்தந் தெரியாதென்பது "என் தாயார் மலடி" என்பதற்கு ஒப்பாகும் என்பதற்கு ஐயமில்லை.

இதுகாறும் நிரூபித்தபடி நியாயங்களைவிசாரிக்குங்கால் ருது மதீவிவாகத்தை அறிவிப்பதுபோல் காணப்படும் ஐந்தாறு மந் திரலிங்கங்களும் மற்றப்பிரமாணவிருத்தங்களாயிருப்பதால் உங்க ளுடைய மனோரதத்திற்குசிறிதும் ஸாதகமாகமாட்டாது. ஆகவே அம்மந்திரலிங்க பலத்தையவலம்பித்துக்கொண்டு, விவாகப்பெண் ருதுமதியாகத்தானிருக்கவேண்டும் என்று ஸ்தாபித்துவிட முன் வருவது முடியாதகாரியமென்றுணரவேண்டும்.

11. விதண்டாவாதத்தில் பண்டிதராயிருக்கும் தார்க்கிகநிபு ணர் ஒருவர் இவ்விதம் மந்திரலிங்கங்களைக் கொண்டு ருதுமதீ விவாஹத்தை வெகு அபூர்வமாக ஊஹம் செய்யும் யுக்தி குசலர் களைப்பார்த்து இவ்விஷயத்தில் கூறுவதாவது:— "ஆர்யச்சிறுமி களுக்கு ஹிதஞ்செய்யவேண்டுமெனக் கருதி ருதுவான பிறகு தான் ஆர்யஸ்திரீகளுக்கு விவாஹம் செய்தல் நலமென்று மந்திர லிங்கங்களால் தாங்கள் கற்பனைசெய்வது வாஸ்தவம் தான். ஆன லும் இப்படி ருதுமதீவிவாக கற்பனையால் ஸ்திரீகளுக்கு ஹிதம் பரிபூர்ணமாகஸித்தித்துவிடமுடியாதென்று எனக்குப்புலப்படுகின் றது. ஆனல் எப்படி ஏற்படுமென்றல் ருதுவான பிறகு தனக் கிஷ்டமாயுள்ள புருஷருடன் புணர்ச்சியால் புத்திரர்களைப்பெற்ற பிறகு அப்புத்திரர்களுடன் கூடிய ஸ்திரீகளுக்குத்தான் விவாகம் செய்யவேண்டும் என்று மந்திரலிங்கங்களைக்கொண்டு ஸ்தாபித்து விடுவதுதான் ஸ்திரீகளுக்கு பூர்ண சுகத்தையளிக்கும். அப்புத் திரவதீ விவாஹத்தையே சாஸ்திரமூலமாகவும் ஸ்தாபிப்பதற்கு முன்வரவேண்டும். அவ்விதம் செய்வதால்தான் ஸ்திரீகளுக்கு பூர்ண சௌக்யம் கொடுத்ததாக ஏற்படும்.

மந்திரலிங்கங்களை இன்னம்கொஞ்சம் ஸூக்ஷ்மமாக விசாரிக் கும் பக்ஷத்தில் புத்திரர்கள் பிறந்த பிறகுதான் ஸ்திரீகளுக்கு விவாஹம் செய்யவேண்டுமென்ற தத்துவமும் புலப்படுகின்றது. மந்திரலிங்கங்களால் புத்திரவதீ விவாஹமும் ஸித்திக்கின்றதென்ற

விஷயத்தை புத்திப்பிரமத்தால் நீங்களிதுவரையில் ஆலோசிக்க வில்லை. நான் தங்களுக்கு அந்த புத்திரவதீ விவாஹத்திற்கு ஆதாரமாயிருக்கும் லிங்கங்களை எடுத்துக்காட்டுகின்றேன்.

1. அதாவது:— வரன் வதுவைப்பார்த்து ஜபிக்கும்படி விதித்துள்ள விவாஹப்பெண்ணுக்கு ஸோமன் முதலாவது கணவனென்ற இருமந்திரங்களில் இரண்டாவது மந்திரத்தில் "ஐசுவர்யத்தையும் புத்திரர்களையும், இவ்விவாஹப்பெண்ணையும் அகனியானவர் எனக்குக் கொடுத்தார்" என்றொரு வாக்யமுண்டு. அம்மந்திரத்தால்மூன்றுவதுபதியாகிய அக்னியானவர்விவாஹப்பெண்ணையும், புத்திரர்களையும், பணத்தையும், தனக்குக் கொடுத்ததாக வல்லவா வரன் சொல்கிறான். விவாஹகாலத்தில் விவாஹப்பெண்ணுக்குப் புதல்வன் இல்லாமல் போனால் புதல்வனையும் அக்னிபகவான் தானம் செய்தாரெனக் கூறும் இம்மந்திரார்த்தம் எங்ஙனம் ஸங்கதமாகும். புதல்வர்கள் விவாஹத்திற்குப் பிறகு உத்பத்தி அடைவார்களென்று வைத்துக்கொண்டு இனி வெகு காலத்திற்குப் பிறகு ஜனிக்கப்போகும் புத்திரர்களைப்பற்றி இம்மந்திரம்கூறுவதாகப் பொருத்தஞ்செய்வது உசிதமில்லை. விவாஹத்திற்குப் பிறகு புத்திரர்கள் உண்டாவார்களென்று எப்படி நிர்ணயிக்கமுடியும். அப்படியே புத்திரர்களை விவாஹகாலத்தில் வரன் பிரார்த்தித்துக் கொள்வதாகச் சொன்னால் இம்மந்திரங்களுக்கு ஆசாமோதகத்துக்குச் (ஆசையால் விரும்பப்பட்டுமட்டிலிருக்கும் குழக்கட்டைககு) சமானமாக அர்த்த விசேஷங்கூறினதாகவல்லவா முடிந்துவிடும். அங்ஙனம் கூறுவது தகுமா ? அங்ஙனமாயின் இனி உத்பத்தியடையப்போகின்றப் பெண்ணுக்கும் விவாகம் செய்யலாமென்றல்லவா சொல்லும்படி நேரிடும். ஒரேகாலத்தில் ஒரே மந்திரத்தில் புத்திரர்களையும் இப்பெண்ணையும்அக்னிபகவான் எனக்குக்கொடுத்தாரென்று சேர்த்துக்கூறியிருக்கும்போது அதில் விவாஹப்பெண்மட்டிலும் அக்காலத்தில் அவசியமிருந்தே தீர வேண்டும் என்று புத்திரர்கள் விவாஹத்திற்குப் பிறகு உண்டாகப் போகிறார்களென்றும் விபாகஞ்செய்வது அர்த்த ஜாதீய (பாதிக்காய் கரிக்குப் பாதிக்காய் விதைக்கு என்ற) நியாயமாகுமன்றோ ! அவ்விதங்கற்பிப்பது சிறிதுமழகல்ல. புத்திரர்கள் விவாஹகன்யகை இவ்விருவர்களையும் எனக்கு அக்னியானவர் கொடுத்

தார்'' என்று இறந்தகாலத்து விகுதியுடன் கூடியபதத்தால் தானம் முந்தியே நடந்துவிட்டதாகக் கூறும் இம்மந்திரமானது விவாஹ பெண்ணைப் போல் புத்திரர்களையும் முந்தியே உண்டாய் விட்டதாகவல்லவா அறிவிக்கின்றது. அன்றியும் இனி ஜனிக்கப் போகின்ற புத்திரர்களுக்கும் முந்தியே ஸித்தமாயிருக்கும் விவாகப் பெண்ணுக்கும் எப்படி சேர்ந்து ஒரே காலத்தில் தானம் செய்யமுடியும். வெகுகாலங்கழித்து உண்டாகப்போகின்றவஸ்துவை முந்தியே தானம் செய்துவிட்டதாக எப்படி இம்மந்திரம் அறிவிக்கலாம். அவ்விஷயத்தில் இறந்தகாலத்தை அறிவிக்கும் "கொடுத்தார்'' என்ற பதம் ஒருக்காலும் ஸரிப்படாது. ஆகையால் இம்மந்திரமூலமாக புத்திரவதீ விவாகந்தான் செய்யவேண்டுமென்று நிர்ணயமாகப் புலப்படுவதாகவே ஒப்புக்கொள்ள வேண்டும்.

2. "सोमायजनिविदे" என்பதாதி ஹோமமந்திரங்களில் வரனால் ஸோமன் அக்கினிமுதலிய தேவதைகளிடமிருந்து தனது புத்திரர்களுக்கு அகால மரணமில்லாமை பாபமில்லாமை தீர்க்காயுஸ் அசுவனிதேவர்களின் ஸம்ரக்ஷணம் இவைமுதலிய விரும்பப்படும் பிரயோஜனங்களெல்லாம் விவாஹஞ்செய்துகொள்ளப்படுங் காலத்தில் புத்திரர்கள் உத்பன்னர்களாக இல்லாதபக்ஷத்தில் பொருந்தமாட்டாதாகையால் புத்திரவதீ விவாகமும் சாஸ்திரீயமென ஸித்திக்கின்றதல்லவா?

3. அவ்விதமே விவாகாக்னியைப் பிரதக்ஷிணஞ் செய்யுங் காலத்தில் ஜபிக்கும்படி வரனுக்கு விகிதமாகிய "புதல்வர்களுடன் இவைகளை அக்னியானவர் எனக்குக்கொடுத்தார்'' என்ற மந்திர வசனத்தாலும் புத்திரவதீ விவாகஞ் சாஸ்தீரீயமென்ற விஷயம் தீர்மானமாகப் புலப்படுகின்றது. பெற்றோர்களும் புத்திரர்கள் உண்டான பிறகு தான் தனது பெண்களை வரனுக்கு தானஞ் செய்யவேண்டுமென்பது பிராசின ஸம்பிரதாயமென்றும் சுருதி மூலமாகவே வெளியாகின்றது.

4. அங்ஙனமே கணவன் இல்லத்திற்கு செல்வதற்கு ரதத்தில் விவாகப்பெண் ஏறிக்கொள்ளுங்காலத்தில் வரன் ஜபிக்கும்படி விஹிதமாயிருக்கும் மந்திரங்களால் மாமனர், மாமியார், தனம் முதலிய வஸ்துக்களுக்கு விவாகப்பெண் எஜமானியாக இருக்க